ஜூலை–2023–ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay Authorization for the month of July 2023)

பள்ளிக் கல்வித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

கடித எண்.9754/பக7(1)/2023 – 2, நாள் 07.08.2023

அனுப்புநர்
திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை – 18/35
முதன்மைச் செயலர்/கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15
அனைத்து மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்கள்
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்
சார் சம்பளக் கணக்கு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி. சென்னை – 03.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி –தொழிற்கல்வி– 49 தற்காலிக தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) தற்காலிக பணியிடங்கள் – ஜூலை – 2023 முதல் டிசம்பர் 2023 வரை ஆறு மாதத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1 அரசாணை(நிலை) எண்.790, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள்.06.11.1996.
2 அரசாணை (1டி) எண்.46, பள்ளிக் கல்வித் (ப.க.7(1)) துறை, நாள்.17.02.2020.
3 பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.000612/எல்/இ3/2020, நாள். 26.07.2023

---------

பார்வை 1–இல் காணும் அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட்ட 117 தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பணியிடங்களுக்கு, பார்வை 2–இல் கண்ட அரசாணையின்படி 01.01.2020 முதல் 31.12.2022 வரை மூன்றாண்டுகளுக்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 117 தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.03.2023 வரை 3 மாதங்களுக்கு துறைத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் பள்ளிக் கல்வி ஆணையர் அளவில் ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்பட்டுள்ளது எனவும் அதன் தொடர்ச்சியாக ஏப்ரல், மே மற்றும் ஜூன் 2023ம் மாதங்களுக்கு அரசால் ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் அரசாணை (நிலை) எண்.790, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள்.06.11.1996ன்படி தோற்றுவிக்கப்பட்ட 117 தற்காலிக தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பணியிடங்களுள், அரசு

(த.பி.பா)

நிதியுதவி பெறும் பள்ளியில் உள்ள 68 தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பணியிடங்கள் நீங்கலாக, தற்போது அரசு பள்ளிகளில் பணியில் உள்ள 49 தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பணியிடங்களுக்கு மட்டும் ஜுலை 2023ஆம் மாதத்திற்கு ஊதிய கொடுப்பாணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இந்நேர்வில், 117 தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவானது அரசாணை (டி) எண்.271, நிதி (சி.எம்.பி.சி)துறை, நாள்.18.08.2022ன்படி அமைக்கப்பட்ட குழுவின் முன் 09.03.2023 அன்று வைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் இணைப்பில் காணும் அரசு பள்ளிகளில் பணியில் உள்ள 49 தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பணியிடங்களுக்கு ஜீலை 2023 முதல் டிசம்பர் 2023 வரை ஆறு மாத காலத்திற்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay authorization) வழங்கப்படுகிறது. மேற்கண்ட பணியிடங்களுக்கான ஜீலை 2023 முதல் டிசம்பர் 2023 வரை ஆறு மாத காலத்திற்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

நகல்:-
இவ்வியக்ககுநர் ந.க.எண்: 006612/அலி/இ1/22 நாள்: 07.08.23
தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இணை இயக்குநர் (தொழிற்கல்வி) (பொ)

பெறுநர்:-
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்